# செய்தி மடல்

(சென்னை கொங்கு நண்பர்கள் சங்க வெளியீடு)

திருவள்ளுவர் ஆண்டு 2040 (மாசி-பங்குனி) மார்ச் 2010 ஏர்-25, உழவு-3, விலை ரூ.10.00

ஆசிரியர், வெளியிடுபவர் :
பரணி கே. பாலசுப்பிரமணி
34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
போன் : 28351244 / 28352744

## கொங்கு நண்பர்கள் சங்கம்

"வெள்ளி விழா இல்லம்"
34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.
Ph : 28351244
28352744

"கொங்கு நாடு இல்லம்"
27, அம்மையப்பன் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014
Ph : 28350432 /
28353214
Fax : 044-28351244

| | |
|---|---|
| துணைத்தலைவர் | : ஈ.ஆர்.ஈஸ்வரன்<br>பி.சென்னியப்பன் |
| செயலாளர் | : பரணி கே. பாலசுப்பிரமணி |
| இணைச்செயலாளர் | : எஸ்.ஆர்.இராஜேந்திரன்<br>கே.சி.பிரபாகரன் |
| பொருளாளர் | : ஆர். செல்வராஜ் |
| தணிக்கையாளர் | : ஆர். பாலச்சந்திரன் |

செயற்குழு உறுப்பினர்கள் :

| | |
|---|---|
| எம். பொன்னுசாமி | கே.கந்தசாமி |
| கே.ஏ.கணபதி | பி.ரவி |
| கே.ராஜாமணி | பி.இராமசாமி |
| வி.பி.செங்கோட்டுவேல் | பி.கே.ஈஸ்வரமூர்த்தி |
| ஆர். சண்முகவேல் | Dr.டி.எஸ்.செல்வராஜ் |
| மு. கார்த்திக் | Dr.எஸ்.அசோகன் |
| கே.கே. ரமேஷ் | N.பாலசுப்பிரமணியம் |
| ஜெ.ஆனந்த் | பி.அருள் |
| வி.பி.வீரப்பன் | எஸ்.சிவசாமி |
| ஆர்.இளங்கோ | Dr.மணிமேகலை புஷ்பராஜ் |
| கே. வரதராஜன் | உத்தமி பொன்னுசாமி |

## இந்த இதழில்


| | |
|---|---|
| பொருளடக்கம் | - 1 |
| தலையங்கம் | - 2 |
| செயலாளர் அறிக்கை | - 3 |
| இரங்கல் கவிதை | - 6 |
| இரங்கல் கூட்டம் | - 14 |
| இரங்கல் செய்திகள் | - 17 |
| கொங்கு விருந்தினர் இல்லத்திறப்பு விழா | - 23 |
| மணமகள் தேவை | - 24 |
| மணமகன் தேவை | - 29 |

### ஆசிரியர் குறிப்பு

வாசகர்களிடமிருந்து கதை / கவிதை / கட்டுரை / செய்தி மடல் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு. கட்டுரை இன முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் இருந்தால் சாலச்சிறந்தது. வரும் கதை, கட்டுரை முதலியவற்றை வெளியிடுவதோ அல்லது சுருக்குவதோ ஆசிரியருக்கு முழு உரிமை.

# தலையங்கம்

அன்பார்ந்த கொங்கு சொந்தங்களே !



நான் முதன் முதலாக எழுதும் இந்த வரிகள் என் பேனாவின் மை கொண்டு எழுதியது அல்ல. என் தம்பி மோகன் மறைவின் துக்கத்தால் வழிந்த கண்ணீரைக் கொண்டு எழுதியது. இப்படி ஒரு தலையங்கத்தை எழுதுவேன் என்று என் கனவிலும் நினைத்ததில்லை. சங்கத்தின் ஆணி வேராக திகழ்ந்த க.ர.ப.மோகன் இல்லை என்ற நிஜத்தை நானும் சங்க உறுப்பினர்களும் இன்னும் நம்பவில்லை. ஆனாலும் மறக்கின்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம்.

வாழ்ந்த ஒவ்வொரு கணமும் நமது சங்கத்தின் வளர்ச்சியையும் சங்க உறுப்பினர்களின் எதிர்காலத்தையும் பற்றி அவர் பேசிய பேச்சு என் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கிறது. அவர் சொல்லிச் சென்ற திட்டங்களையும், விட்டுச்சென்ற பணிகளையும் நிறைவேற்றினால் சங்கமும் முன்னேறும், மோகன் ஆத்மாவும் சாந்தியடையும். அப்படிப்பட்ட வளர்ச்சிப்பணியில், பாதையில் உறுப்பினர்கள் அனைவரது ஆதரவையும் முழுமையாக எதிர்பார்க்கிறேன்.

10 ஆம் வகுப்பு, +2 ஆம் வகுப்பு தேர்வு எழுதும் நம் வாரிசுகளுக்கு என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். 2010-ஆம் ஆண்டு பட்ஜெட் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்ற நேரம். விவசாயத்தின் பக்கம் அரசாங்கத்தின் கவனம் இன்னும் முழுமையாகத் திரும்பவில்லை என்ற ஆதங்கம் கிராமப்புற மக்களிடத்தில் நிலைவுகிறது. வருகின்ற காலங்களில் நமது சங்கம் விவசாயிகளுக்கு ஆதரவாக செய்ய முடிவதைச் செய்யும். விவசாயம் லாபகரமாக மாறுவதற்கான வழிமுறைகளை ஆராய்ந்து நமது கருத்துக்களை அரசாங்கத்திற்கு கொண்டு சேர்க்க முயற்சிப்போம்.

ஏப்ரல் 18 ஆம் தேதி புதிய கட்டிடத்தின் திறப்பு விழாவை நடத்துவது என்று செயற்குழுவிலே ஆலோசனை செய்யப்பட்டிருக்கிறது. அதற்குள்ளாக கட்டிடப்பணிகளை முடிக்க செயலாளர் பரணி கே.பாலசுப்பிரமணி தலைமையில் இருக்கின்ற கட்டிட குழு இரவு பகலாக உழைத்துக்கொண்டிருக்கிறது. முடிய வேண்டும் என்று நீங்களும் உங்கள் குலதெய்வத்தை வேண்டிக்கொள்ளுங்கள். அதிகாரப்பூர்வமான அறிவிப்பும் அழைப்பிதலும் உரிய நேரத்தில் உங்களை வந்து சேரும்.

தம்பி க.ர.ப.மோகனின் இரங்கல் கூட்டத்தில் பிப்ரவரி 8 ஆம் தேதி கலந்து கொண்ட சொந்தங்கள் அத்தனைபேருக்கும் என் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். மோகனுடைய குடும்பத்தாருக்கும் உற்ற நண்பர்களுக்கும் என்னுடைய ஆறுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். மோகனுடைய கனவை நனவாக்க புயலெனப் புறப்படுவீர்.

எதுவும் நம்மால் முடியும் என்ற நம்பிக்கையுடன்

உங்கள்

B.R.T.சென்னியப்பன், துணைத்தலைவர்

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்

# செயலாளர் அறிக்கை

அன்புடையீர்,

வணக்கம்,



"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன், வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

என்ற பொய்யாப் புலவரின் வாக்கிற்கிணங்க வாழ்வாங்கு வாழ்ந்து, நம்மையெல்லாம் மீளாத்துயரத்தில் ஆழ்த்திவிட்டு, என்றும் நீங்காப் புகழுடன் விண்ணுலகில் வாழும் தெய்வத் திருவடிகளைச் சேர்ந்து விட்ட கொங்குக் குலமணி தெய்வத்திரு. கே.ஆர்.பி.மோகன் அவர்களுடைய மறைவு நம்முடைய சமுதாயத்திற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

திரு.மோகன் அவர்கள் ஈரோடு மாவட்டத்தில் கரட்டூர் என்ற இயற்கை எழில் கொஞ்சும் அழகிய சிற்றூரில் திரு. கே.ஆர். பழனிச்சாமி கவுண்டர் - திருமதி பழனியம்மாள் தம்பதியருக்கு இரண்டாவது மகனாக 29-11-1953 அன்று பிறந்தார். இவரின் அண்ணன் டாக்டர் கே.ஆர்.பி.சண்முகம் அவர்கள் ஆவார். திரு.மோகன் மூன்றாம் வகுப்பு வரை கரட்டூரிலும், நான்காம் வகுப்பிலிருந்து SSLC வரை திருச்சிக்கு அருகிலுள்ள திருப்பராயத்துறையில் அமைந்துள்ள ஸ்ரீவிவேகானந்தா வித்தியாவனத்திலும் பயின்றார். பள்ளியில் மிகச்சிறந்த மாணாக்கராக விளங்கினார். படிப்பு, விளையாட்டு, பொது அறிவு, ஒழுக்கம் ஆகிய அனைத்திலும் ஒரு முன்மாதிரி மாணவராக விளங்கி, அனைவரின் பாராட்டையும் பெற்றதோடு பல பரிசுகளையும் பெற்றார். SSLC ல் Best Outgoing Student என்ற விருதையும் பெற்றார். பின்னர் 1970 ஆம் ஆண்டு PUC படிப்பை திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியிலும், B.E. பொறியியல் பட்டப்படிப்பை கோவை CIT கல்லூரியிலும் சிறந்த முறையில் படித்து முடித்தார். கல்லூரியில் படிக்கும் காலத்திலேயே கொங்கு சமுதாய வளர்ச்சியில் பெரும் அக்கறையும் ஆர்வமும் கொண்டவராக விளங்கினார். கொங்கு சமுதாயத்தைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க மற்ற மாணவர்களுடன் சேர்ந்து பாடுபட்டார்.

1976 ஆம் ஆண்டு சென்னைக்கு வந்த திரு. கே.ஆர்.பி.மோகன் இரண்டு வருடங்கள் ஒரு தனியார் தொழிற்சாலையில் சேர்ந்து தன்னுடைய தொழிற்திறமையை வளர்த்துக்கொண்டார். பின்னர் நண்பர்கள் சிலருடன் சேர்ந்து பாரத் இன்சுலேட்டர்ஸ் என்ற தொழிற்சாலையை 1979 ஆம் ஆண்டு தொடங்கினார்.

தொழிலில் நேர்மை, அயரா உழைப்பு, திறமை, தன்னம்பிக்கை, விடாமுயற்சி ஆகியவையாலும், பெற்றோரின் உதவி, ஊக்கம், ஒத்துழைப்பு ஆகியவையாலும் தொழிலில் பெரும் வெற்றிகண்டு, சுமார் 75 பேர் பணிபுரியும் "Gaffan Engineers Pvt. Ltd. என்ற நிறுவனமாக உருவாக்கினார். தொழில் நிமித்தமாக ஜப்பான், சீனா, ஜெர்மனி, ஆஸ்திரேலியா உட்பட பல வெளிநாடுகளுக்குச் சென்று வந்தவர் இவர்.

இவருடைய மனைவி திருமதி சக்தி, 11ம் வகுப்பு படித்துவரும் மகள் செல்வி சுருதி, அண்ணன் டாக்டர் கே.ஆர்.பி.சண்முகம் மற்றும் குடும்பத்தினர் மட்டுமன்றி கொங்கு சமுதாய மக்கள் அனைவரையும் பெரும் துயரத்தில் ஆழ்த்திவிட்டு 24-1-2010 அன்று மறைந்த திரு. கே.ஆர்.பி.மோகன் அவர்களின் உடல் 25-1-2010 அன்று கரட்டூர் கிராமத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. ஏராளமான கொங்கு சொந்தங்களும், நண்பர்களும் தமிழகமெங்கிலுமிருந்து வந்து இறுதி ஊர்வலத்தில் பங்கேற்று கண்ணீர் அஞ்சலி செலுத்தினர்.

8-2-2010 அன்று சென்னை அண்ணா நகர் கைலாஷ்ஸ்ரீ அரங்கில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்க சார்பில் இரங்கல் கூட்டம் நடைபெற்றது. பெரும் திரளான கொங்கு சொந்தங்களும், நண்பர்களும் கலந்து கொண்டு திரு.கே.ஆர்.பி.மோகன் அவர்களுடைய திருவுருவப் படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தினர். திரு.கே.ஆர்.பி.மோகன் அவர்களுடைய சமுதாயத் தொண்டையும், அரிய உழைப்பையும், சீரியபண்புகளையும் இரங்கல் கூட்டத்தில் பேசிய அனைவரும் நினைவு கூர்ந்தனர். தொலைபேசி வாயிலாகவும், கடிதம் மூலமாகவும் வந்த எண்ணற்ற இரங்கல் செய்திகள் திரு. மோகன் அவர்கள் மேல் கொங்கு சொந்தங்களும், பிற நண்பர்களும் வைத்திருக்கும் பேரன்பையும், பாசத்தையும், மதிப்பையும் காட்டுவனவாக அமைந்துள்ளதோடு, அவர் கொங்கு நண்பர்கள் சங்க வளர்ச்சிக்காகவும், மேம்பாட்டிற்காகவும், கொங்கின மக்கள் முன்னேற்றத்திற்காகவும், ஒற்றுமைக்காகவும் ஆற்றிய அரும்பணிகளையும், செய்த சாதனைகளையும் எடுத்துக்காட்டுவனவாகவும் அமைந்தன.

இரங்கல் கூட்டத்தில் உரையாற்றிய சங்கத்தின் துணைத்தலைவரும், கொங்குநாடு முன்னேற்றக்கழகத்தின் பொதுச்செயலாளருமான திரு. ஈ.ஆர்.ஈஸ்வரன் அவர்கள் திரு.மோகன் அவர்களுடைய பேருள்ளத்தையும், பெருஞ்சிறப்பையும், சமுதாயத் தொண்டினையும் குறிப்பிட்டதோடு சங்கத்தின் சார்பாக கீழ்க்கண்ட தீர்மானங்களை வாசித்தார்.

**தீர்மானங்கள்** :-

1. கொங்கு நண்பர்கள் சங்கத்தின் ஒரு தூணாக விளங்கியவரும், சங்க வளர்ச்சியில், கூட்டு முயற்சி மட்டுமல்லாமல் தனிப்பட்ட முறையில் தன் சொந்த நிதியில் கணக்கில்லாமல் பல உதவிகளைச் செய்தவரும், நட்பிற்கு இலக்கணமாகத் திகழ்ந்தவரும், தன்னோடு பழகிய அத்துணை நண்பர்களையும் தன் பேச்சால் மகிழ்வித்து கவர்ந்தவரும், ரோட்டரி சங்கத்தில் பல பதவிகளை வகித்து பல திட்டங்களின் முன்னோடியாகத் திகழ்ந்தவரும், கொங்கு நாட்டின் அரசியல் புரட்சியில் பெரும்பங்காற்றியவருமான திரு. கே.ஆர்.பி.மோகன் அவர்களின் மறைவிற்கு இக்கூட்டம் ஆழ்ந்த அனுதாபத்தையும், அவருடைய குடும்பத்தார் அனைவருக்கும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறது.

2. கொங்கு நண்பர்கள் சங்கத்தின் வளர்ச்சியில் பெரும்பங்காற்றிய திரு.கே.ஆர்.பி.மோகன் அவர்களின் நினைவாக, புதிய கட்டிடத்தின் ஒரு தளத்திற்கு அவர் பெயரை வைப்பதென்று கொங்கு நண்பர்கள் சங்க செயற்குழு முடிவு செய்துள்ளது.

3. ஏழைக் குழந்தைகளின் கல்விக்கு எல்லோரும் உதவ வேண்டும் என்ற அவர் கனவை நனவாக்கும் வகையில் அவர் பெயரில் “கே.ஆர்.பி.மோகன் கல்வி அறக்கட்டளை” நிறுவுவதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் தீவிர உறுப்பினராக, செயற்குழு உறுப்பினராக, செயலாளராக, பின்னர் தலைவராக அயராது பாடுபட்டு கொங்கு சமுதாய வளர்ச்சிக்கு உழைத்து, எல்லோர் நெஞ்சங்களிலும் நீங்கா இடம் பெற்றுவிட்ட திரு.கே.ஆர்.பி.மோகன் அவர்களுக்கு நினைவஞ்சலி செலுத்துவதற்காக நடைபெற்ற இரங்கல் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கும், இரங்கல் செய்தி அனுப்பிய கொங்கு சொந்தங்களுக்கும் சங்கத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சங்க வளர்ச்சியே மூச்சாக, பேச்சாகக் கொண்டு, நாளெல்லாம் அரும்பாடுபட்ட திரு.மோகன் அவர்கள் விட்டுச்சென்ற பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள உறுதி எடுத்துக் கொள்வோம்! கொங்குக் குலமணி தெய்வத்திரு. கே.ஆர்.பி.மோகன் அவர்களின் நினைவையும், புகழையும் என்றும் போற்றுவோம் !


நன்றி, வணக்கம்.

பரணி கே.பாலசுப்பிரமணி
செயலாளர்

❖❖❖❖

# உன் நினைவில் உன் சகோதரர்கள்

தங்கு புகழ் கொங்கு சங்கம்
பொங்கும் எழில் எங்கள் தங்கம்
அன்பில் பண்பில் அறிவில் ஆன்ற
ஆற்றல் மிக்க பொறியியல் அறிஞர்
அத்தாணிக் கரட்டூர் பெற்ற நண்பர்
மோகன் என்கிற முத்தமிழ் அன்பர்
அன்பால் அணைத்து அறிவால் இணைத்து
அனைவரின் உள்ளத்தைத் தன்பால் கவரும்
கருணைமிக்க கனிவுடையாளர்
பணிவுமிக்க பண்புடையாளர்
எடுத்த பணியை முயன்று முடித்து
அடுத்து நின்று ஆவன செய்யும்
இனிய நண்பர் இன்சொல் வேந்தர்
அறிவுத்திறனால் அனைவரும் போற்ற
அழியாப் புகழைப் பெற்றுத் திகழ்ந்த
புரியாப்புதிரைப் புன்னகையோடு
தெளிவாய் காட்டும் தேர்ந்த நல்லறிஞர்
எதிரே நிற்பது எவராய் இருப்பினும்
புதிராய் நின்று புன்னகையோடு
அதிரவைத்தே அவரை வெல்லும்
ஆன்றோன் சான்றோன் அயர்விலாத தலைவன்
ஒன்றிப்பழகி உயிருக்குயிராய்
உறவுடன் கலந்து நட்புடன் கலந்த
உத்தமச் சீலர் உயர் பண்பாளர்
வித்தக வேந்தன் வினை பலவென்று
இத்திரை மீது இருந்தவர் இன்று
இன்னுயிர் நீத்து இறையடி சேர்ந்தார்




தந்தையும் தாயும் தனயனும் அவரின்
பிரிவால் வாடி வதங்கிடும் நாளில்
நன்மைகள் பலவும் நமக்கெனச் செய்த
நண்பரை இழந்து வாடியே நிற்கும்
நமக்கு இனி யாரோ ஆறுதல் சொல்வார்
இறையே நீதான் எங்களைத் தேற்றிக்
காத்திட வேண்டும், காத்திட வேண்டும்.


என்றும் உன் நினைவில்
கே.சி.பிரபாகரன், கள்ளிப்பட்டி
மற்றும் "Free Masons", Gobi

❖❖❖❖❖❖❖❖

தமிழகத்தின் புகழ்மேவும்
தலைநகரில் பெருநகரில்
கொங்கு சமுதாயத்தின்
மங்காத புகழ் பரப்ப
பலதுறையிலும் சிறப்பாக
பணியாற்றிப் புகழ் சேர்த்த
மாமணிகளை உலகினுக்கு
முரசறைந்து இயம்பிடவும்
இளைய சமுதாயம்
இணையற்ற சாதனைகள்
புரிந்திருக்க அவரை
புவியோருக்கு எடுத்துக்காட்டி
உயர் கல்வியில் அவர்
சிறந்து மேலும் படித்துயர
பலவாறு உதவிகள்
பரிந்து செய்ததுவும்
வெளியூரிலிருந்து தலைநகர்
பல சோலிகளுக்காக வந்துறும்
தமது இனமக்கள்
தங்கவும் உதவிகள் பல பெற்றிடவும்



வழிகள் வகுத்திருந்து
செயல்பட்ட திறமும்
விருந்தோம்பலுக்கு இவ்வினத்தினருக்கு
ஈடு இணையில்லை பாரீரென்று
அரங்கத்தில் பறைசாற்றிய
ஒருங்கிணைந்த முயற்சியும்
செயல் புரிந்திருந்த இவரது
தன்னலமற்ற சேவைப் பண்பும்
எடுத்துரைக்க சொற்கள் போதவில்லை
இன்னும் எவ்வளவோ
திட்டங்களும் முயற்சிகளும்
இவருக்காக காத்திருக்க
இறைவன் இவரை
ஒய்வெடுக்கப் பணித்திட்டது
எம்மின மக்களுக்குப் பேரிழப்பு
கொங்கு மக்களின்று
தாயிழந்த பிள்ளைகளாய்
சவலைக் குழந்தைகளாய்
மோகனெனும் மாமனிதருக்கு
அஞ்சலி செலுத்துகிறோம்.
உமது பணிவார்ந்த
தன்னலமற்ற சேவையினையும்
பாசமுள்ள மனதினையும்
புறந்தள்ளி எம்மிடமிருந்து
உமைப் பிரித்தெடுத்தேகிய
இறைவன் செயலின்
வெம்மையினை மறப்பதெங்கனம் ?




கவிஞர். மனோன்மணி மாணிக்கவாசகம்
சென்னை.

❖❖❖❖

# நினைவஞ்சலி

(இரங்கல் கூட்டத்தில் வாசித்தது)

கொங்கு நாட்டுத் தங்கமே !
கொங்கு குலச் செல்வமே!
கொங்கு கோமகனே
பாசமிகு மோகனே - எங்கள்
நேசமிகு தலைவனே !
சங்கப் பணிகளே உன் பேச்சாய் இருந்தது.
சங்க வளர்ச்சியே உன் மூச்சாய் இருந்தது.
சங்கத்தின்
சீரிய உறுப்பனராய்
செயற்குழு உறுப்பினராய்
செயலாளராய்
தலைவராய்
பொறுப்புகள் பல ஏற்று
சிறப்பாகச் செயல் புரிந்தாய்.
ஓய்வறியா உழைப்பு
ஓங்கி நின்ற அன்பு
எப்போதும் சிரித்த முகம்
என்றுமே இனிய சொல்
வாடி நின்றோர்க்கு
ஓசையின்றி உதவிய வள்ளல் நீ.
கொங்கு வானில்
வெள்ளி நட்சத்திரமாய்
மின்னிய தலைவா-நீ
விடியலைக் காட்டி
வேகமாய் நகர்ந்து விட்டனையே?
வெள்ளி நட்சத்திரம்
வெள்ளி சூரியனாய்
எங்கும் வெளிச்சம் பரப்பும் - என்று
எண்ணிய எங்கள் இதயம்
ஏங்கி வெதும்பி நிற்க
வானில் மறைந்த தலைவனே !
இவர் போல் யார் என்று



ஊர் போற்ற வாழ்ந்த பெருமகனே !
வாழ்வாங்கு வாழ்ந்து
வானுலகம் சென்று விட்டாய்.
உன்னுடைய இழப்பு - பேரிழப்பு
ஈடு செய்ய முடியாத இழப்பு.
கொங்கு குலத்திலகமே! உன் திருவுருவை எங்கள்
இதயங்களில் செதுக்கி என்றும் போற்றி
உன்வழி நடந்திருப்போம்.

முனைவர் மணிமேகலை புஷ்பராஜ்
சென்னை

❖❖❖❖

## இரங்கல் பா


தங்கமே தரணி புகழ வாழ வந்தவனே
உன் சாதனைதான் எத்தனை எத்தனை
இளமையிலே உன் வாழ்வில் என்றும் வசந்தம்
குறும்பிலே மட்டுமில்லை படிப்பிலும் நீ படுசுட்டி
தாத்தா போடும் மனக்கணக்கை மறுநொடியில் சொல்வாயே
அன்று குழந்தைகள் நம் விளையாட்டில் நீதானே சட்டாம்பிள்ளை
பொறியியலை முடித்தபின் உன் பெருமைதான் என்ன சொல்ல
சென்னையிலே பெயர் சொல்லும் பட்டியலில் நீயும் ஒருவன்
கண்ணே நம் வீட்டுவிழாவெல்லாம் நடுநாயகம் நீதானே
மகிழ்ச்சியிலே நனையவைப்பாய் உன் இனிய நகைச்சுவையால்
உன் சீரிய சிந்தனையை தெளித்தாயே செய்தி மடலில்
கொங்கு நண்பர்கள் கூற்றினிலே நன்கு தெரிந்து கொண்டோம்
வீட்டுக்கு மட்டும் நீ பிள்ளையில்லை ஊருக்கும் தான்
உறவுக்கும் நட்புக்கும் உறைவிடமே எங்கு மறைந்தாய்
மோகு மோகு என்று அன்பு மோத கூவும் எங்களுக்கு
என்றும் ஒளி வீசும் தீபமாய் ஒளிர்வாய் கண்ணே !

அன்புடன்
அக்கா கே.லோகு, கோவை

❖❖❖❖

# இரங்கற்பா

ஒரு கூட்டுப் பறவைகளாய்
வாழ்ந்த வாழ்க்கையில், கூட்டைவிட்டுப் பிரிந்த
தாய்ப் பறவையின் மீளாத் துயரம் !
அன்பும் கருணையும் நிறைந்த நீர்
மழை மேகமானீர் !
வாழ்ந்த நாட்களில் உலகம் பாராட்டும்
பணிகளைச் செய்த செம்மலானீர் !
சேர்த்த செல்வங்களைவிட உள்ளங்களைச் சொத்தாக்கிய
உணர்வின் உன்னதம் நீங்கள் !
எளிமை உண்மை நிழலாய்த் தொடர சமதர்மத்தைப் போதித்தீர்.
பணத்தை நேசிக்கும் உலகில் மனித மனங்களை
நேசித்த மாமனிதர் ! புகழுக்காக மயங்காத உள்ளம்.
மரணம் உமக்கில்லை ! அந்தோ !
உம்மை வாழ்த்திய நெஞ்சங்களும் வணங்கிய கைகளும்
இன்று அஞ்சலி செய்து கண்ணீர் சிந்துகின்றன !
பூக்களின் மேல் இருக்கும் பனித்துளிகள்
இதயம் கனத்து உங்களுக்காக சிந்திய கண்ணீர்த்துளிகள் !
மலர்ந்த மலர்கள் வீழ்வது திண்ணம்தான் ! காலதேவனின்
கணக்கில் இவ்வளவு அவசரகதி ஏனோ!
நின்ற இடம் பேசிய மேடை எல்லாம்; இன்று வெறுமையாய்...
மரணம் உங்களைத் தழுவினாலும் நீங்கள் மரணிக்கவில்லை !
உங்களின் பதிவுகள் ஓராயிரம் நினைவுகளாய்
எங்களை வட்டமிட்டுக்கொண்டேதான் இருக்கும் !
தாயைப் பிரிந்த கன்றாய், தவிக்கும் உள்ளங்களுக்கு
அன்பு காட்டிய ஆதரவுக் கரம்
இன்று கையற்றுப் போய்விட்ட கையறு நிலை !
தோன்றாத் துணையாய் இருந்த ஆலமரம்
வீழ்ந்துவிட்ட ஈடுசெய்ய இயலா இழப்பில்
துயருரும் நாங்கள்
கண்ணீரைக் காணிக்கையாக்குகிறோம் !




கொங்குமாமணி எம்.முருகேசன்
தலைவர்
என்.எஸ்.ஐ.டி.மற்றும் எம்.ஜி.எம்.குழுமம்

(இரங்கல் கூட்டத்தில் வாசித்தது)

❖❖❖❖

## இரங்கல் கூட்டத்தில் வாசித்தளித்த கண்ணீர் அஞ்சலி

கள்ளங் கபடம் தெரியாது - ஒரு
களங்கம் உன்னிடம் கிடையாது !
எனக்குத் துணையாய் நீ
இருப்பாயென இருந்தேனே !
இன்று நீ இல்லையென்பதை - என்
இதயம் தாங்கவில்லையே !
சின்னஞ்சிறிய இதயத்திலே - நான்
சேர்த்த எண்ணம் பல கோடி - அதை
சிதற விட்டு எங்கே சென்றாய் !
அண்ணா, அண்ணா என்று நீ
அழைத்ததை என் மனம் மறக்குமா ?
வீடு சென்று சேர்வோம் என்றாயே - என்
நெஞ்சில் சாய்ந்து விட்டாயே !
உறக்கத்திலும் உன்னைப் பார்த்திருந்த - என்
மனதினைச் சொல்வேனோ?
ஒவ்வொரு நாளும் உன்னுடன் வாழ்ந்த
உறவினைச் சொல்வேனோ?
நீ இருக்கும் வரை உன்னருகே - நான்
என்றிருந்தேன் - உயிர்
பறக்கும் பொழுது என்
தோளே போதுமெனச் சாய்ந்து விட்டாயே ?
இரவல் தந்தவன் கேட்கின்றான்
இல்லையென்றால் அவன் விடுவானா ?
கண்ணில் மணிபோல் மணியின் நிழல்போல்
கலந்து பிறந்தோமடா - இந்த
மண்ணும் கடல் வானும் - மறைந்து
முடிந்தாலும் மறக்கமுடியாதடா
உன் உறவைப் பிரிக்க முடியாதடா
உன் உறவில் வாழ்ந்திருந்தேன் - இனி
யார் நிழலில் குடியிருப்பேன் !



என்றும் உன் நினைவுடன்...
அண்ணா டாக்டர். கே.ஆர்.பி.சண்முகம்

# பணிவெனும் தன்மையின் இலக்கணம் மோகன்

அருமை நண்பர் மோகனின் மறைவு
இரும்பு இதயத் தவரையும் தாக்கும்;
உருவம் அழிவது இயற்கை நிகழ்வு
உள்ளம் அழுவது உற்றவர் உணர்வு;
ஏறத் தாழ முப்பது ஆண்டுகள்
மாறாப் பண்பினன் மோகனை அறிவேன்;
அன்பு தவழும் முகம் அகத்தில்
பண்பு திகழும் பார்வை செயலில்
கருணை என்னும் அழகு சேர்த்தார்
நட்பு எனும் செல்வம் மோகன்
உள்ளத்தைப் புகழ்ந்திடவே சொற்கள் இல்லை!

வாழ்க்கையின் ஓட்டத்தில் வளர் அறிவின் வேகத்தில்
பாழ்பட்டுப் போகின்ற பணிவென்னும் நற்பண்பை
ஆழ்மனதின் அடித்தளமாய் அமைத்துக் கொண்டார்!
அனைவர்க்கும் நண்பரெனுஞ் சிறப்பைப் பெற்றார்!
எத்தனையோ மேடுபள்ளம் எவ்வண்ணம் வந்தாலும்
சித்தம் கலங்காமல் அத்தனையும் எதிர்கொண்டார்!
ஒத்திசைந்த குணத்தவர்தம் ஒப்பற்ற துணையோடு
ஓயாமல் சமுதாய உயர்வினுக்கே உழைப்பீந்தார்!
சத்தியமாய்ச் சொல்லுகிறேன் சான்றாண்மை அவரியல்பு!
நித்தியம் எனச்சொல்வேன் நிறைவுதரும் அவர்சிரிப்பு!

கொங்கு நண்பர்கள் சங்கத்தின் தலைவர்,
பொங்கும் அன்பினைப் பொருளெனக் கொண்டவர்,
எங்கும் எவர்க்கும் ஏற்றம் விழைபவர்,
மங்காப் புகழுக் குரியவர் ஆகினார்!
என்னதான் பேசியென்ன? என்னதான் எழுதியென்ன ?
எண்ணவே முடியவில்லை இயற்கையின் தீர்ப்புதன்னை;
நல்லவர்கள் இளம்வயதில் இவ்வுலகைத் துறப்பதுவும்,
நன்மையற்ற செய்கைகளே நாளும் நடப்பதுவும்,
நானிலத்தில் தொடர்கதையாய் நிகழும் போது
நாம்வருந்தி என்னபயன் ? வணங்கி நிற்போம்.

மோகனை வணங்கி நிற்போம்

அறிஞர். நா.சோமசுந்தரம்
செயலாளர், அருள்ஜோதி சங்கம், சென்னை

❖❖❖❖

# இரங்கல் கூட்டம்

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தை வழிநடத்திச் சென்ற மாமனிதனுக்கு, கொங்கு சமுதாய வளர்ச்சிக்கு அயராது பாடுபட்ட உத்தமத்தலைவனுக்கு - தெய்வத்திரு. மோகன் அவர்களுக்கு புகழஞ்சலி செலுத்தும் இரங்கல் கூட்டம் 8-2-2010 திங்கட்கிழமையன்று சென்னை அண்ணாநகர் கைலாஷ் ஸ்ரீ மகாலில் மாலை 6 மணிக்குத் தொடங்கியது. அரங்கத்தில் தெய்வத்திரு. கே.ஆர்.பி.மோகன் அவர்களின் நிழற்படம் வைக்கப்பட்டிருந்தது. திரு.மோகன் அவர்களின் மலர்ந்த முகம், புன்சிரிப்பு, கனிவான பார்வை போன்ற அருங்குணங்களைத் தத்ரூபமாக பிரதிபலிப்பதாக இருந்த அந்தப் படத்தைப்பார்த்த அனைவருக்கும் துயரமும், வியப்பும் தோன்றியதோடு, கண்ணீரையும் வரவழைத்தது.

திரு.மோகன் அவர்களுடைய திருவுருவப்படத்திற்கு அனைவரும் மலர் அஞ்சலி செலுத்தினர். அனைவரும் இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினர். முதலில் சங்கத்தின் செயலாளர் திரு.பரணி கே.பாலசுப்பிரமணி உரையாற்றினார். திரு.மோகன் அவர்களுடைய அருங்குணங்களையும், சங்கத்திற்காக இரவு பகல் பாராது தன்னுடைய உடல்நலத்தைக் கூட சரியாக கவனிக்காமல், சரியாக ஓய்வெடுக்காமல், எப்படியெல்லாம் உழைத்தார் என்பதையும், சங்க வளர்ச்சிக்காக சொந்தப்பணத்தை எப்படியெல்லாம் கொடுத்து உதவினார் என்பதையும் எடுத்துரைத்தார். திரு.மோகன் அவர்களுடைய மறைவு சங்கத்திற்கும், கொங்கு சமுதாயத்திற்கும் ஒரு பெரிய இழப்பு என்பதோடு, மிக நெருங்கிப் பழகிய தனக்கும் பெரிய இழப்பு என்று கூறினார்.

சங்கத்தின் துணைத்தலைவர் திரு.ஈ.ஆர்.ஈஸ்வரன் பேசுகையில் திரு.மோகன் அவர்களுடைய திடீர் மறைவு கொங்கினத்திற்கு ஓர் ஈடு செய்ய முடியாத இழப்பு என்று கூறியதோடு மோகன் அவர்களுடைய இனப்பற்றையும், சமுதாயத் தொண்டினையும், செயலாற்றலையும் வெகுவாய் பாராட்டி புகழஞ்சலி செலுத்தினார். திரு.மோகன் அவர்களுடைய நினைவைப் போற்றும் வகையில் புதிய விருந்தினர் இல்லத்தின் ஒரு தளத்திற்கு அவர் பெயரைச் சூட்டுவது என்றும், ஏழை மாணவர்களுக்கும், IAS, IPS போன்ற போட்டித்தேர்வுகளில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கும் உதவிசெய்யும் நோக்கில் அவர் பெயரில் ஒரு கல்வி அறக்கட்டளை அமைப்பது என்றும் சங்கம் முடிவு செய்திருப்பதாகக் குறிப்பிட்டார். கொங்குநாடு முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும் திரு.மோகன் மறைவுக்கு அனுதாபத்தையும், இரங்கலையும் தெரிவிப்பதாகக் கூறினார்.

தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பனார் திரு.மோகன் அவர்களுடைய சிறப்பியல்புகளை, குறிப்பாக எப்போதும் சிரித்த முகம், இனிய மரியாதை கலந்த பேச்சு, கொங்கு நாட்டிற்கே உரித்தான உறவுமுறை சொல்லி பழகும் அன்புள்ளம், அனைவரையும்

அரவணைத்து அரிய செயலாற்றும் அருங்குணம் போன்றவற்றை நினைவு கூர்ந்ததோடு, புதிய விருந்தினர் மாளிகையின் ஒரு பிரிவிற்கு அவருடைய பெயரைச் சூட்டினால் பொருத்தமாயிருக்கும் என்று கூறினார்.

மூத்த வழக்கறிஞர் திரு.ஆர்.காந்தி அவர்கள் உரையாற்றும் போது சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தைத் துவக்கியவர்களில் தான் உட்பட ஓரிருவரே தற்போது உள்ளனர் என்றும், சங்க வளர்ச்சிக்கு திரு.மோகன் அவர்கள் மிகச்சிறப்பாகப் பணிபுரிந்தார் என்றும், வருகின்ற ஆண்டு குடும்ப விழாவில் திரு.மோகன் அவர்களுக்கு, அவர் புரிந்த தொண்டிற்காகவும், சாதனைகளுக்காகவும் கொங்கு மாமணி விருதளித்து அவர் நினைவையும், புகழையும் போற்ற வேண்டும் என்றும் கூறினார்.

NSIT திரு.எம்.முருகேசன் அவர்கள் திரு.மோகன் அவர்களுடைய இனிய பண்புகளையும், கொங்கினப்பற்றையும், சமுதாயத்திற்காகக் கொட்டிய தன்னலமில்லா கடும் உழைப்பையும் குறிப்பிட்டதோடு, ஒரு கவிதாஞ்சலியையும் நிகழ்த்தி திரு.மோகன் அவர்களுடைய புகழுக்கு மேலும் பெருமை சேர்த்தார்.

முன்னாள் அமைச்சர் திரு.சின்னசாமி அவர்கள் பேசும்போது தீரன் சின்னமலை சிலை அமைக்கும் பணிகளில் திரு.மோகன் அவர்களுடைய பங்கைக் குறிப்பிட்டதோடு, கொங்கு சமுதாயத்திற்காக திரு.மோகன் ஆற்றிய சேவைகளை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்தினார்.

சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு.கே.பாலசுப்பிரமணியன், திரு.மோகன் அவர்கள் தன்னோடு இணைந்து எவ்வளவு சிறப்பாகப் பணியாற்றினார் என்பதைக் குறிப்பிட்டார். அனைவரின் ஒத்துழைப்பையும் பெற்று, சங்கத்தின் வளர்ச்சிக்கும், மேம்பட்ட செயல்பாடுகளுக்கும் நாளெல்லாம் உழைத்த கொங்கு நாட்டின் கொடையாகத் திகழ்ந்தவர் எனக் கூறினார்.

சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு.K.R.அப்பாவு, திரு.மோகன் அவர்களுடைய சமுதாயத் தொண்டினையும், சங்கத்திற்காக அவர் புரிந்த சேவைகளையும் நினைவு கூர்ந்து, அவர் மறைவிற்கு ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் தெரிவித்தார்.

சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு. R.தேவராஜ், திரு.மோகன் அவர்களுடைய ஓய்வறியா உழைப்பையும், சங்கத்தின் வளர்ச்சிக்காக அவர் மேற்கொண்ட பணிகளையும், குறிப்பிட்டு புகழஞ்சலி செலுத்தினார்.

சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு.N.கோவிந்தசாமி அவர்கள். திரு.மோகன் அவர்களுடைய சமுதாயத் தொண்டினையும், அரிய பணிகளையும், சீரிய செயல்களையும் நினைவு கூர்ந்து, அவருடைய மறைவு நம்முடைய சமுதாயத்திற்குப் பேரிழப்பு என்று கூறி, அவருடைய குடும்பத்தார்க்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொண்டார்.

முன்னாள் தமிழக காவல்துறை கூடுதல் தலைவர் திரு. வி.சி.பெருமாள் IPS (Retd) திரு.மோகன் அவர்களுடைய ஒப்பற்ற பணிகளையும், உயர்பண்புகளையும் குறிப்பிட்டு

நினைவஞ்சலி செலுத்தினார்.

முன்னாள் தமிழக காவல்துறை கூடுதல் தலைவர் திரு.எம்.சிதம்பரசாமி IPS (Retd) பேசும்போது, திரு.மோகன் அவர்களுடைய தனிப்பெரும் சிறப்புகளைக் குறிப்பிட்டு அவர் ஆற்றிய சேவைகளை கொங்கு சமுதாயம் என்றும் நினைவில் வைத்திருக்கும் எனக் குறிப்பிட்டார்.

திரு. சுந்தரவடிவேலு அவர்கள் திரு.மோகன் அவர்களுடைய உயர்பண்புகளையும் சமுதாய சேவையையும் வெகுவாகப் பாராட்டினார்.

முன்னாள் சங்கத்தலைவர் திரு. எஸ்.அருணாசலம், திரு. மோகன் அவர்களின் மறைவிற்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்ததோடு, கொங்கு நண்பர்கள் சங்க வளர்ச்சியில் பெரும் பங்காற்றியவர்களில் திரு.மோகன் அவர்களுக்குத் தனியிடம் உண்டு எனக் குறிப்பிட்டார்.

கரூர் திரு.அட்லஸ் நாச்சிமுத்து, திரு.மோகன் அவர்களுடைய ஊக்கத்தினால், ரூ. 1000 செலுத்திய 100 உறுப்பினர்களைச் சேர்த்து கொடுத்ததாகக் கூறி, திரு. மோகன் விட்டுச்சென்ற சமுதாயப் பணிகளை தொடர்ந்து வெற்றிகரமாக செயல்படுத்துவதுதான் அவருக்கு செலுத்தும் அஞ்சலியாக இருக்கும் என்று கூறினார். சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் திருமதி உத்தமி பொன்னுசாமி பேசும்போது, திரு. மோகன் அவர்களுடைய அன்புகலந்த அணுகுமுறையையும், தமிழ்மொழி மற்றும் ஆங்கிலமொழிகளில் அவரின் வளத்தையும், திறமையையும் புகழ்ந்ததோடு,

"சொலல்வல்லன், சோர்வு இலன், அஞ்சான், அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது"

என்ற வள்ளுவரின் வாக்கிற்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் திரு.மோகன் எனவும் குறிப்பிட்டார். இணைச் செயலாளர் திரு.கே.சி.பிரபாகரன், டாக்டர் மணிமேகலை புஷ்பராஜ், திரு.கே.ராஜாமணி, Dr.S.அசோகன், இணைச் செயலாளர் திரு.எஸ்.ஆர்.ராஜேந்திரன், பொருளாளர் திரு.ஆர்.செல்வராஜ் முதலானோரும் திரு.மோகன் அவர்களுக்குப் புகழஞ்சலி செலுத்தினார்கள். திரு. மோகன் அவர்களுடைய அண்ணன் டாக்டர் கே.ஆர்.பி.சண்முகம் கண்ணீர் மல்க உரையாற்றினார். இவ்வளவு திரளான கொங்கு சான்றோர்களும், கொங்கு நண்பர்கள் சங்க உறுப்பினர்களும், ரோட்டரி சங்க உறுப்பினர்களும், கொங்கு எலைட்ஸ் எண்டர்பிரைசஸ் நண்பர்களும் கலந்து கொண்டதும், திரு.மோகன் அவர்களுக்கு புகழஞ்சலி செலுத்தியதும் தங்கள் குடும்பத்திற்கு ஆறுதலை அளிப்பதாகக் கூறினார்.

இரங்கல் கூட்டத்தில் திருமதி சக்தி மோகன் அவர்களும் மற்றும் குடும்பத்தாரும் கலந்து கொண்டனர்.

இரங்கல் கூட்டம் நடத்த இடமளித்த தொழிலதிபர் திரு.நல்லியப்பன் அவர்களுக்கு கொங்கு நண்பர்கள் சங்கம் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

❖❖❖❖

# கொங்குக் குலமணி தெய்வத்திரு. கே.ஆர்.பி.மோகன் அவர்கள் மறைவையொட்டி சான்றோர்களின் இரங்கல் செய்திகள்

### திரு. பெஸ்ட் எஸ்.இராமசாமி

மாநிலத் தலைவர், கொங்குநாடு முன்னேற்றக் கழகம்

நமது கொங்குக் குலமணி திரு.கே.ஆர்.பி.மோகன் அவர்கள் இயற்கை எய்திய செய்தி மிக்க வருத்தமளித்தது, அன்னாரது இரங்கல் கூட்ட கடிதம் கிடைக்கப்பெற்றேன்.

அவரது அயராத உழைப்பும், அரும் பண்புகளும் வியக்கவைத்தன. கொங்கின முன்னேற்றத்திற்காகவும், கொங்கு சமுதாய வளர்ச்சிக்காகவும் பாடுபட்டுவந்த அவரது இழப்பு நமக்கெல்லாம் சொல்லமுடியாத துயரம்தான். அன்னார் விட்டுச்சென்ற பணியையும், கொங்கின முன்னேற்றத்திற்காக அவர் ஆற்றிய உழைப்பையும் நாம் சிரமேற்கொண்டு தொடர்ந்து செவ்வனே செய்வதும், அவரது கனவை நனவாக்குவதும்தான் நாம் அவருக்கு ஆற்றும் நன்றிக்கடனாகும்.

அன்னாரது இரங்கல் கூட்டத்தில் அனைவரும் ஒன்றுகூடி அவரது நினைவையும், புகழையும் போற்றுவோம் என்று கூறிக்கொள்கின்றேன்.

### திரு. அரங்க. துரைராஜ் தேர்வேந்தன்

பொதுச்செயலாளர், கொங்கு வேளாளர் சங்கங்கள் கூட்டமைப்பு

“நமது உறுப்பினரான சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் தலைவர் திரு. கே.ஆர்.பி.மோகன் அவர்கள் கொங்கு இன முன்னேற்றத்திற்காகவும் கொங்கு சமுதாய வளர்ச்சிக்காகவும் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் செழுமைக்காகவும் அரும்பாடுபட்டவர்.

அன்னாரது தீடிர் மறைவு கொங்கு சொந்தங்கள் அனைவரையும் துக்கதிலும் துயரத்திலும் ஆழ்த்தியுள்ளது.

கொங்கு வேளாளர் சங்கங்கள் கூட்டமைப்பின் சார்பில் மறைந்த அன்னாரின் மனைவி மக்களுக்கும் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தினருக்கும், நமது ஆழ்ந்த அனுதாபத்தினையும் வருத்தத்தினையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னாரின் ஆன்மா சாந்தி அடைய வேண்டுகிறோம்.

### டாக்டர். பேராசிரியர் எம்.ஏ.வேலுசாமி

முன்னாள் தலைவர், சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்

வணக்கம், தங்களது 29-01-2010 தேதியிட்ட கொங்குக் குலமணி திரு.கே.ஆர்.பி.மோகன் அவர்கள் 24-01-2010 அன்று இயற்கை எய்தினார் என்ற துயரக்கடிதம் கண்டு அதிர்ச்சி அடைகிறேன். தாங்கள் குறிப்பிட்டது போல் அவர் ஒரு பெருமைமிகு தலைவர். மேலும் இன்சொல், அயரா உழைப்பு, கொடை உள்ளம் போன்ற அருங்குணங்கள் கொண்ட ஒரு மாமனிதர். அவர் கொங்குச் சமுதாய வளர்ச்சிக்காக நாளெல்லாம் பாடுபட்டு வந்தவர் என்பது சமுதாயத்தில் உள்ள அனைவருக்கும் மிகத் தெரிந்த ஒன்று. அன்னார் அவர்கள் இயற்கை எய்தியது தாங்கொணாத் துயரத்தைஅளிக்கிறது. இந்த இழப்பு சமுதாயத்திற்கும், கொங்கு நண்பர்கள் சங்கத்திற்கும், அவர்களது குடும்பத்திற்கும் ஒரு பேரிழப்பு.

தாங்கள் குறிப்பிட்டது போல் அன்னாரது திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி அவரது நினைவையும், புகழையும் போற்றுவது மிகவும் அவசியம். இதற்காக தாங்கள் 8-2-2010 திங்கட்கிழமை மாலை 6.30 மணிக்கு அண்ணா நகர், கைலாஷ் ஸ்ரீ மஹாலில் இரங்கல் கூட்டத்தைத் கூட்டியிருப்பது மிகவும் பொருத்தமும், அவசியமுமாகும், இந்த முக்கியமான கூட்டத்திற்கு என்னால் நேரில் வரஇயலவில்லையே என்று மிகவும் வருந்துகிறேன். என்னுடைய ஆழ்ந்த இரங்கலை அனைவருக்கும், குறிப்பாக அன்னாரது குடும்பத்தினருக்கும் தெரிவிக்குமாறு வேண்டுகிறேன்.

தெய்வத்திரு. கே.ஆர்.பி.மோகன் அவர்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

### ஆசிரியர் திரு. தி.செ.பழநிவேலு

அமைப்பாளர், அண்புக்குடில் சேவை மையம், நாமகிரிப்பேட்டை

வணக்கம். அருட் பேராற்றலின் தனிப்பெருங்கருணையினால் சாதாரண மனிதக்கூட்டமாகிய நம்மை அதிர்ச்சியடையச் செய்யும் நிகழ்வுகளும் நடைபெறுகின்றன. அத்தகைய ஒரு நிகழ்வினைக் கொங்கு நண்பர்கள் சங்கமும், அன்பர்களும் சந்திக்கிறோம்.

ஒரு செய்தியினை நாம் அனைவரும் உணர வேண்டிய பாடம் கொங்குக்குலமணி கே.ஆர்.பி.மோகன் மறைவினால் ஏற்பட்டுள்ளது.

இனவளர்ச்சிக்காகவும், சமுதாய எழுச்சிக்காகவும் உழைத்திட முன்வருபவர்கள்

தங்களுடைய உடலைச் சமுதாயத்தின் சொத்து என்ற நிலையில் பேண வேண்டும். இந்தப் படிப்பினையை அன்பரது மறைவால் நாம் உணருகிறோம்.

அவரது இழப்பினால் அவரது குடும்பமும், தொழிலும் வேதனையுறுவது போல சங்கமும் அன்பர்களும் வருந்தவேண்டியுள்ளது. எனது ஆழ்ந்த வருத்தத்தினையும், துயரத்தினையும் அவரது குடும்பத்தினர் உட்பட அனைவருக்கும் தெரிவியுங்கள்.

### திரு. மு.கண்ணப்பன்

முன்னாள் அமைச்சர், ஆலாம்பாளையம், பொள்ளாச்சி

வணக்கம், சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் தலைவர் திரு.கே.ஆர்.பி.மோகன் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து மிகவும் வேதனைப்படுகிறேன். கொங்கு மக்களின் முன்னேற்றத்திற்கு அயராது அரும்பணியாற்றி உழைத்தவர். அவரது மறைவு ஈடுசெய்ய முடியாத இழப்பு.

அவரை இழந்துவாடும் அவரது குடும்பத்தாருக்கும், கொங்கு நண்பர்கள் சங்க நிர்வாகிகள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### திரு. எஸ்-கே.செங்கோட கவுண்டர்

தலைவர், கொங்கு வேளாளர் அறக்கட்டளை, சேலம்

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் தலைவர் திரு.கே.ஆர்.பி.மோகன் அவர்கள் மறைந்த செய்தியைக் கேட்டு பெரும் அதிர்ச்சியில் உறைந்தோம். அவர் நமது சமுாயத்திற்கும், சங்கத்திற்கும் ஆற்றிய பணிகளைக் கணக்கிலிடமுடியாது. அவரின் பிரிவால் வாடும் அவர்களின் குடும்பத்திற்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய சேலம் கொங்கு வேளாளர் அறக்கட்டளையின் சார்பாக எல்லாம் வல்ல இறைவனை வேண்டி எங்களது அஞ்சலியைச் சமர்ப்பிக்கின்றோம்.

### திரு. சு.கதிரேசன்

தலைவர், செஞ்சேரிப்புத்தார் கிராமநீரினைப் பயன்படுத்துவோர் சங்கம்,
குமாரபாளையம்

திரு.கே.ஆர்.பி.மோகன் அவர்கள் இயற்கை எய்தினார் என்ற செய்தி கேட்டவுடன் மிகவும் துயரமுற்றேன். குடும்பத்திற்கும், கொங்கினத்திற்கும் பேரிழப்பு. துயரில் இருந்து மீண்டு குடும்பம் அன்றாட பணியில் ஈடுபட எல்லாம்வல்ல இறைவனும், கொங்குசொந்தங்களும் உறுதுணையாக இருப்போம் என்பதுதான் அவருக்கு நாம் செய்யும் நன்றி; கைமாறு.

## திரு. செ.செந்தில்குமார்

வழக்கறிஞர் மற்றும் உரிமையாளர், செல்லப்பா ஸ்வீட்ஸ் & பிஸ்கட்ஸ்
ஆலாம்பாளையம், பொள்ளாச்சி

உயர்திரு. கொங்குக் குலமணி திரு.கே.ஆர்.பி.மோகன் அவர்கள் இயற்கை எய்திய செய்தி கேட்டு மிகவும் வருத்தமடைகிறேன். மேலும் நான் அவரை நேரில் சந்தித்தது இல்லையென்றாலும் அவர் நமது கொங்கு சமுதாயத்திற்காக முன்னின்று ஆற்றிய சேவைகளை நமது இதழ்மூலமாக அறிவேன்.

அன்னாரைப் பிரிந்து வாடும் அவர்தம் குடும்பத்தாருக்கும் மேலும் நமது கொங்கு நண்பர்கள் சங்கத்திற்கும் ஏற்பட்ட இழப்பை ஒவ்வொரு கொங்குவீட்டிலும் ஏற்பட்ட இழப்பாக எண்ணி எனது ஆறுதல் கடிதத்தைச் சமர்ப்பிக்கின்றேன்.

## Er.எம்.வேணுகோபால்

தலைமைப் பொறியாளர் (ஓய்வு), தமிழ்நாடு மின்சார வாரியம், தாராபுரம்

வணக்கம், இப்பவும் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத் தலைவர் திரு.கே.ஆர்.பி.மோகன் அவர்கள் மறைவு குறித்து வருத்தமுற்றேன். கொங்குச் சமுதாயத்திற்கு சிறந்த முறையில் தொண்டாற்றியவர். சங்கத்தின் வளர்ச்சிக்குப் பாடுபட்டவர். அவரின் மறைவிற்கு என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## திரு. ஆ.கந்தசாமி

செயலாளர் (ஓய்வு), வேளாண் விளை பொருள் விற்பனை குழு, கோவை

அன்புடையீர். மதிப்பிற்குரிய கொங்குக் குலமணி, திரு. கே.ஆர்.பி.மோகன் அவர்கள் 24-01-2010 அன்று இயற்கை எய்தினார் என்பதை அறிந்து மிகவும் வருந்தினோம். இக்கடிதத்தின் மூலம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். அன்னார் அவர் காட்டிய நல்வழியைப்பின்பற்றி சங்கத்தை வளர்ப்பதே அவருக்கு நாம் செய்யும் நன்றிக்கடன் ஆகும். வளர்க கொங்கு சமுதாயம்.

## டாக்டர் கே.ஆர்.பாலசுப்பிரமணியம்

ஈரோடு

கொங்குக் குலமணி திரு.கே.ஆர்.பி.மோகன் அவர்களின் மறைவால் துயர்வுற்றிருக்கும் குடும்பத்தினருக்கும், நமது சங்கத்தினருக்கும் எனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## திரு. சி.அய்யாக்கண்ணு

உரிமையாளர், ஈரோடு கெமிகல்ஸ், ஈரோடு

கொங்கு நண்பர்கள் சங்கத்தலைவர் திரு.கே.ஆர்.பி.மோகன் அவர்கள் இயற்கை எய்திய செய்திகேட்டு மிகவும் வருத்தமடைகிறேன்.

ஒரு சாதனையைச் செய்ய வேண்டுமெனில் சில தியாகங்களையும் செய்தாக வேண்டும் என்ற பெரியாரின் வாக்குப்படி, கொங்கு சமுதாய முன்னேற்றத்திற்காகப் பல தியாகங்களைச் செய்தவர் மறைந்த தலைவர் திரு. கே.ஆர்.பி.மோகன் என்று கேள்விப் பட்டிருக்கிறேன்.அவர் வழியைப் பின்பற்றி கொங்கு நண்பர்கள் சங்கப் பொறுப்பாளர்கள் அனைவரும் நமது சமுதாயம் முன்னேறப் பாடுபடவேண்டும் என்று அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன். அவரது மறைவால் துன்புறும் அவரது குடும்பத்தாருக்கு எனது வருத்தத்தையும், இரங்கலையும் தெரிவிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

## திரு. சி.க.கருப்பண்ணன்

நிறுவனர், செல்லம் மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளி, சின்னய்யம்பாளையம், நாமக்கல்

பேரன்புடையீர். அமரர் கொங்குக்குலமணி திரு.கே.ஆர்.பி.மோகன் அவர்களின் திடீர் மறைவு அறிந்து திடுக்கிட்டேன். துயருற்றேன். அவருடைய கனிவான பேச்சும் பரிவும் என் மனதில் என்றும் நிலைத்திருக்கும், இவ்வளவு விரைவில் நம்மை விட்டுப் பிரிந்து விடுவார் என்று நினைத்துக்கூட பார்க்க முடியவில்லை.

அன்னாரது மறைவினால் துயரமுற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும், கொங்கு நண்பர்கள் சங்க சொந்தங்களுக்கும் என் ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்க அவரது புகழ் !

## திரு. டி.வி.ஹரிஹரன்

தலைவர், சென்னை மாவட்ட சிறு தொழிற்சாலைகள் சங்கம், சென்னை

திரு கே.ஆர்.பி.மோகன் அவர்களுடைய மறைவு மிகுந்த வேதனையையும் வருத்தத்தையும் அளிக்கிறது. அவருடைய குடும்பத்தார்க்கும், உறவினர்களுக்கும், சென்னை கொங்கு நண்பர்கள் சங்க உறுப்பினர்களுக்கும் என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். அன்னாரது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

### பேராசிரியர் பவளன் கிருஷ்ணசாமி

பெங்களூரு

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் தலைவரும், கொங்கு இன அபிமானியுமான திரு.கே.ஆர்.பி.மோகன் அவர்களின் மறைவுச் செய்தி நமக்கு மிகுந்த துயரத்தைத் தந்தது. கர்நாடக கவுண்டர் சேவா சங்க உறுப்பினர்கள் மூலமாக அவரது பெருந்தன்மையையும், மேலான பண்புகளையும் அறிந்திருக்கிறோம். தமது இன வரலாறு, பண்பாடு என்பவற்றில் அவர் கொண்டிருந்த ஈடுபாட்டையும், அவற்றைப் பேணிப் பாதுகாப்பதிலும் அவற்றை இளைய தலைமுறையினருக்கு எடுத்துச்செல்வதிலும் அவருக்கிருந்த அக்கறையையும் நன்றியோடு நினைவு கூர்கிறோம். அவரது பிரிவால் துயரமுற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கும், கொங்கு நண்பர்கள் சங்கத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். அவர்களது துயரத்தில் நாமும் பங்கு கொள்கிறோம். அமரர் கே.ஆர்.பி.மோகன் அவர்களது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

### கவிஞர் சக்திக்கனல்

கோவை

வணக்கம், செய்திமடல் பிப்ரவரி இதழில் நம் சங்கத்தலைவர் திரு.கே.ஆர்.பி.மோகன் அவர்கள் மறைந்தார் என்ற செய்தியைப் படித்து வருந்துகிறேன். அருமையான ஒரு நல்ல மனிதரை கொங்கு நண்பர்கள் சங்கம் இழந்து விட்டது மிகவும் வேதனையானது. ஈடு செய்ய முடியாத பேரிழப்பு.

அவரது மறைவால் வாடும் குடும்பத்தினர்க்கும், கொங்கு நண்பர்கள் சங்க உறுப்பினர்களுக்கும் எனது இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவர் மறைவிற்கு முன்தினம் எழுதிய தலையங்கம் கொங்கு சொந்தங்களை நல்வழியில் நிச்சயம் வழி நடத்திச்செல்லும் என நம்புவோம்.

அவரது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறேன்.

### திரு. கே.கணேசன்

கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (ஓய்வு), ஜலகண்டபுரம்

திரு.கே.ஆர்.பி.மோகன், தலைவர், சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம், 24-1-2010 காலையில் மரணம் அடைந்துவிட்டது இந்த மாத செய்தி மடலில் கண்டு, மிகவும் வேதனை அடைந்தேன். பழகுவதற்கு மிகவும் இனிமையானவர். நமது சமுதாயத்திற்கு மிகவும் உதவிகரமாக இருந்தார். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டிக்கொள்கிறேன். அவருடைய குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

# கொங்கு விருந்தினர் இல்லத் திறப்புவிழா

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் சாதனை மகுடத்தில் மேலும் ஓர் அணிகலனாக அமைந்திடும் வகையில் உருவாகி வரும் நமது புதிய கொங்கு விருந்தினர் இல்லக் கட்டுமானப்பணி முடிவடையும் தருவாயில் உள்ளது. மீதமுள்ள வேலைகளை விரைந்து முடித்திட கட்டிடக்குழுவினர் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். பேருள்ளம் கொண்ட கொங்கு சொந்தங்களின் கொடையாலும், உழைப்பாலும் உருவாகியுள்ள விருந்தினர் இல்லத்தின் திறப்பு விழா வருகின்ற 18-04-2010 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி அளவில் இராயப்பேட்டை, பீட்டர்ஸ் சாலையில் உள்ள நெ.196, மோனகன் மகளிர் மேல்நிலைப்பள்ளி அரங்கத்தில் (புதுக் கல்லூரி அருகில்) நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சிறப்பு மிக்க இந்த இனிய விழாவில் அனைத்து கொங்கு சொந்தங்களும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டுமாறு சங்கத்தின் சார்பாக அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

இப்படிக்கு
பரணி கே.பாலசுப்பிரமணி
செயலாளர்
சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்

❖❖❖❖